2021 பிப்ரவரி 26]

35—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***66445—திரு. அ.செ. வில்வநாதன்:**

மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, ஆம்பூரில் மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் தொகுதி, ஆம்பூரில் மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

முற்பகல் 10–40

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாயில்லாமல் நானில்லை, தானே எவரும் பிறந்ததில்லை, எனக்கொரு தாய் இருக்கின்றாள், என்றும் என்னைக் காக்கின்றாள்'; என்றும் என்னைக் காக்கும் அந்தத் தாய் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். 'இருந்தாலும், மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும், இவர்போல் யார் என்று ஊர் சொல்ல வேண்டுமென்று' வாழ்ந்து மறைந்த இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். 'வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்கள் மனதில் நிற்பவர் யார்' என்றால் அவர்தான் எடப்பாடியார், எடப்பாடியார் என்று சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

[2021 பிப்ரவரி 26

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணுரிமை காத்த தந்தை பெரியார் பிறந்த மண்ணில், ஈரோடு கிழக்குத் தொகுதியில் ஓர் அரசு மகளிர் கல்லூரி அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதற்கொண்டு, உயர் கல்வியில் தமிழகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி, ஒட்டுமொத்தமாக இந்நாள்வரை 40 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தோற்றுவித்து, அதே நேரத்தில் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளாக, 27 கல்லூரிகளையும் தோற்றுவித்து, அந்த 27 கல்லூரிகளையும் அரசு கல்லூரிகளாக மாற்றி, பொறியியல் கல்லூரி 4–ம், பலவகை தொழில்நுட்பக் கல்லூரி 21 கல்லூரிகளையும் உருவாக்கித் தந்து, இன்றைக்கு தமிழகத்திலே உயர் கல்வியிலே மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி, இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற வகையிலே, உயர் கல்வியில் சேர்கின்ற மாணவர்களின் சேர்க்கையை Gross Enrolment Ratio, 49 சதவிகிதமாக உயர்த்தித் தந்து, புதிதாக 1,666 பாடப் பிரிவுகளையும் தந்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அம்மாவினுடைய வழி தொடரும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் இதனை இணைந்து செயல்படுத்தியிருக்கிறார்கள். மேலும், தேவைப்படுகின்ற இடங்களிலே மகளிருக்காக, தனியாக, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை உருவாக்கித் தந்ததும் அம்மாவினுடைய அரசு. அந்தவகையிலே ஈரோட்டிலே அரசு மகளிர் கலைக் கல்லூரி வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றார். அங்கே தேவைக்கேற்ப மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் பரிசீலனை செய்வார் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்தப்

2021 பிப்ரவரி 26]

பகுதியிலே கல்லூரியில் மாணாக்கர்களின் சேர்க்கைக்கு ஏற்றாற்போல், அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. P. சின்னப்பன் அவர்கள்.

திரு. P. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கின்ற தங்கத் தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், தங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். இரும்பு தேசத்தின் கரும்பு மனிதர், வாழும் கரிகாலன், காவேரி காப்பாளர், விவசாயிகளின் தோழர் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், ஜல்லிக்கட்டு நாயகர், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும், எங்கள் மண்ணின் மைந்தர் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர், எங்கள் ஆருயிர் அண்ணன் திரு. கடம்பூர் ராஜூ அவர்களையும் வணங்குகிறேன்.

விளாத்திகுளம் தொகுதி, நெடுங்காலமாக அரசு கல்லூரியே இல்லாத தொகுதியாக இருந்தது. அந்தத் தொகுதியில் நாகலாபுரத்திலே மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமைத்துக் கொடுத்தார்கள். அந்த உறுப்புக் கல்லூரியை இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும், உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் மற்றும் எங்கள் மண்ணின் மைந்தர் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களும், அரசு கலைக் கல்லூரியாகத் தரமுயர்த்தித் தந்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே கல்லூரியில் நிறைய கட்டமைப்பு வசதிகள் இருக்கின்றன. ஏராளமான கட்டடங்களும், வகுப்பறைகளும் உள்ளன. அங்கே ஒரு B.Ed. கல்லூரி அமைக்க வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களின் நீண்ட நெடுநாள் கோரிக்கை. அதே கல்லூரியிலேயே B.Ed., கல்லூரியும், B.Sc., Physics, B.Sc. Chemistry, B.A. தமிழ் பாடப் பிரிவுகளையும் அமைத்திட தங்கள் வாயிலாக மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கின்றேன்.

[2021 பிப்ரவரி 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரசு கலைக் கல்லூரிக்கு புதிய பாடப் பிரிவுகள் தேவை என்ற கோரிக்கையை இங்கு வைத்திருக்கின்றார். 2011 ஆம் ஆண்டிற்குப் பின்னர், நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல 1,666 புதிய பாடப் பிரிவுகளைத் தந்து, எந்தெந்தப் பகுதியிலே மாணாக்கர்களுக்கு என்னென்ன பாடப் பிரிவுகள் தேவையோ அத்தனையையும் வழங்கிய அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு. அந்த வகையிலே, எதிர்வரும் காலகட்டங்களில் உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அரசு கலைக் கல்லூரிக்குத் தேவையான பாடப் பிரிவுகளை வழங்க அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று B.Ed. கல்லூரியையும் அங்கு தோற்றுவிக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்திருக்கின்றார். B.Ed. கல்லூரியில் மாணவர்களின் சேர்க்கை என்பது மிகக் குறைந்த அளவில் இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி அவர்கள்.

திரு. ஏ. இரத்தினசபாபதி: இம்மாமன்றத்தில் கப்பலோட்டிய தமிழருக்கும், டாக்டர் P. சுப்பராயருக்கும், திரு. ஓமந்தூராருக்கும் நிழற்படங்களை அமைத்து, அந்தப் பெரியவர்களுக்கும், இந்தப் பேரவைக்கும் பெருமை சேர்த்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் அறிவித்ததைப்போல எங்கள் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வந்திருந்து, காவேரி–வெள்ளாறு இணைப்பை சமீபத்தில் துவக்கி வைத்த, ஏழைகளின் ஏந்தல், தமிழகத்தின் முதல்வர் எடப்பாடியார் அவர்களுக்கும், தென்னாட்டுச் சிங்கம் அருமை அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும், எங்கள் மாவட்ட மக்களின் சார்பிலே மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021 பிப்ரவரி 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போற்றுதலுக்கும், புகழுக்கும் உரிய பொன்மனத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்னுடைய அறந்தாங்கி தொகுதியில், திரு. மாணிக்கவாசகர் அமர்ந்து 'திருவாசகத்தை' எழுதிய திருப்பெருந்துறைக்கு அருகாமையிலே, கலைக் கல்லூரி ஒன்றை அமைத்துத் தந்திருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மாவைப் போலவே அந்தக் கலைக் கல்லூரி கம்பீரமாக எழுந்து நின்று கல்விச் சேவையை செய்து வருகிறது. இருபாலரும் படிக்கின்ற அந்தக் கலைக் கல்லூரிக்கு சுற்றுச் சுவர், கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள் இல்லை. எனவே, அந்தக் கலைக் கல்லூரிக்கு அடிப்படை வசதிகளைச் செய்துதர வேண்டுமென்று இந்த அவையில் ஆறு முறை கேட்டு நான் பதிவு செய்திருக்கின்றேன். உயர்ந்த உள்ளம் படைத்த மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், உடனடியாக அதற்கான உத்தரவினை வழங்கி, தேர்தல் அறிவிப்பிற்கு முன்னாலே, அதற்கான பூமி பூஜையை நடத்துவதற்கு ஆவன செய்வார்களா என்று கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், எந்தெந்த கல்லூரிகளுக்கு கட்டமைப்பு வசதி தேவையோ, அவற்றிற்கெல்லாம் ஒட்டுமொத்தமாக நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டடத்திற்கு 210 கோடி ரூபாயும், அதன் பிறகு, எங்கெங்கெல்லாம் கட்டட வசதியும், ஆய்வக வசதியும் தேவை என கோரிக்கை வந்தவுடன், ஒட்டுமொத்தமாக, கட்டமைப்பு வசதிகளுக்காக 150 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்து, தேவைப்படுகின்ற இடங்களிலே ஆய்வகக் கட்டடமும், வகுப்பறைக் கட்டடமும் வழங்கிய அரசு, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு.*

அதேநேரத்தில், தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய அரசு கல்லூரிகளுக்கு சுற்றுச் சுவர் அமைப்பதற்காக 37 கோடி ரூபாய் தேவை என்ற கோரிக்கை வந்தவுடன், 37 கோடி ரூபாயை குறைக்காமல் அப்படியே வழங்கி, அனைத்துக் கல்லூரிகளுக்கும் சுற்றுச் சுவர் அமைத்துக் கொடுத்ததும் மாண்புமிகு அம்மாவின் அரசு.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்தக் கல்லூரியானது, உறுப்புக் கல்லூரியாக இருந்து, அரசு கல்லூரியாக இப்போது மாற்றப்பட்டிருக்கிறது. அவர் கோரிக்கை வைத்தவுடன், ஆய்வு செய்யப்பட்டு, அங்கு சுற்றுச் சுவர் தேவைப்படுகின்றபட்சத்தில், கூடிய விரைவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுற்றுச் சுவர் அமைத்துத் தரப்படும் என்பதையும் இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.

திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவ சமுதாயத்திற்கு மகத்தான பல நலத் திட்டங்களை வாரி வழங்கிய அன்புத் தாய், ஆராதனைக்குரிய இதய தெய்வம், உயர் கல்வித் துறையில் உயரிய சாதனைகளைப் படைத்து, தமிழகத்தை பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக மாற்றியமைத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருதாழ்களை பணிந்து வணங்குகிறேன்.

அம்மா அவர்களுடைய வழியிலே பொற்கால ஆட்சியை நடத்தி வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாணவர்களுக்கு எல்லாம் இன்றைக்கு கல்வி கடவுளாக விளங்கி, பள்ளி மற்றும் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களுக்கு 2GB தரவு data கார்டுகளை வழங்கி, அதன் பின்னர் இன்று, 9, 10 மற்றும் 11 ஆம் வகுப்புகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு முழுமையான தேர்ச்சி என்று அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் மாணவர்களை மன உளைச்சலிலிருந்து காப்பாற்றி, இந்தியாவின் வருங்கால தூண்களான மாணவச் சமுதாயத்தினை கட்டிக் காப்பாற்றுகின்ற, மாணவர்கள் குலத்தினுடைய கல்விக் கடவுள் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக அரசாங்கத்தில் எடுக்கக்கூடிய அனைத்து முயற்சிகளுக்கும், நலத்திட்ட வளர்ச்சிப் பணிகளுக்கும், உறுதுணையாக, ஒத்துழைப்போடு இருந்து அரும்பணியாற்றி வருகின்ற கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், இந்த வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களுக்கும் நன்றிகலந்த வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021 பிப்ரவரி 26]

முற்பகல் 10–50

சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதியில் ஓர் உறுப்புக் கல்லூரி அமைத்துத்தர வேண்டும் என்று மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் வேண்டி இந்த சட்டமன்றப் பேரவையில் பதிவு செய்திருந்தபோதும்கூட, தற்போது Ph.D. *என்ற ஆராய்ச்சிப் படிப்பு படிக்கின்ற மாணவர்களுக்கெல்லாம் தனியாக ஒரு கல்லூரி தேவை. ஏனென்றால், இன்றைக்கு அவர்களுக்குத் தேவையான குறிப்புகளையெல்லாம் கலைக் கல்லூரியிலிருந்துதான் எடுத்துக்கொண்டு வருகின்றனர். இன்றையதினம் சேலம் மாநகரத்தில் ஆராய்ச்சிப் படிப்பு படிக்கின்ற மாணவர்கள் அதிகம் இருக்கின்ற காரணத்தினால்,* Ph.D. *படிக்கின்ற மணவர்களுக்காக தனியாக ஒரு கல்லூரிக் கட்டடத்தை அமைத்துத் தர வேண்டும் அல்லது சேலம் தெற்குத் தொகுதியில் இருக்கக்கூடிய வேளாண்மைக் கூட்டுறவுப் பயிற்சி மையத்திற்குப் பின்புறம் இருக்கக்கூடிய இடத்தில் ஓர் உறுப்புக் கல்லூரியையாவது அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உயர் கல்வி படிக்கின்றவர்களில், ஆராய்ச்சிப் படிப்பு படிக்கின்றவர்களுக்கு அதிகப்படியான கட்டமைப்பு வசதிகளும், அதற்குண்டான ஆய்வக வசதிகளும் ஏற்படுத்திக்கொடுத்த காரணத்தினால்தான், இன்றைக்கு இந்திய அளவிலே, ஆராய்ச்சிப் படிப்பில் தமிழகம் முதலிடத்தில் இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய சேலம் மாவட்டத்தில் பெரியார் பல்கலைக்கழகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதில் ஆராய்ச்சிப் படிப்புகளுக்குண்டான அனைத்து வசதிகளும் இருக்கின்றன. மேலும்,* Ph.D. *படிக்கின்ற வகையில் அவர் சார்ந்திருக்கின்ற சேலம்–7, சேலம்–8 பகுதிகளில் கல்லூரிகள் இருக்கின்றன. அந்தக் கல்லூரிகளில் கூடுதலாக ஆராய்ச்சிப் படிப்பு படிப்பதற்கான கட்டமைப்பு வசதிகள் தேவை என்றால் அதனை*

ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கருணையோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

36—

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகக் கட்டடம்

***34872—டாக்டர் ஆர்.டி. அரசு:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஒன்றியம், சித்தாமூரில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சத்துணவு தந்த சரித்திர நாயகன், மன்னாதி மன்னன், மக்கள் திலகம்; புரட்சித் தலைவர், பாரத ரத்னா அவர்களை வணங்கி, தங்கத் தாரகை விருது பெற்ற, உலகத் தலைவர்களில், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சபை முன்னாள் செயலாளர் Kofi Annan, *ரஷ்ய நாட்டின் அதிபர்* Vladimir Putin, *அயர்லாந்து நாட்டின் அதிபர்* David Anderson *ஆகியோர் வரிசையில், தங்கத் தாரகை விருது பெற்ற உலக முதல் பெண் தலைவரும், (மேசையைத் தட்டும் ஒலி) 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து தன் இன்னுயிர் ஈந்து, தாலிக்குத் தங்கம் திட்டத்தின்மூலம் 12,50,705 மகளிர் வாழ்க்கையில் உயர் கல்வியை ஊக்குவித்து, இன்று தமிழகம் உயர் கல்வியில் இந்தியாவிலேயே முதன்மை இடத்திற்கு வருவதற்கு உறுதுணையாக திட்டத்தினை வழங்கி, எனக்குப் பின்னாலும் இன்னும் எத்தனை நூற்றாண்டுகளானாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் பணி செய்யும் என்று கழக உடன்பிறப்புகளுக்கு அன்பு ஆணையிட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அருகில் துயில்கொண்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்*